# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 108/மா/2024
நாள் 25.01.2025

திரு வீ. ராமதாஸ்
திருச்சி. ............... மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் 2,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. ................ எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி, பாலக்கரை மெயின் ரோடு, கதவு எண்.10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வீ.ராமதாஸ் என்பவரின் 19.07.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.07.2024 அன்று பெறப்பட்டு 108/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி, பாலக்கரை மெயின் ரோடு, கதவு எண்.10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு வீ.ராமதாஸ் என்பவர் 19.07.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட 32வது வார்டில் உள்ள தர்மநாதபுரம் மெயின்ரோட்டில் உள்ள பழைய கழிவுநீர் சாக்கடையை இடித்துவிட்டு புதிதாக சாக்கடை கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தன. 04.06.2024 அன்று பார்த்தபோது சாக்கடையின் தரை தளத்திற்கு ரெடிமிக்ஸ் கான்கீரிட், லாரி மூலம் கான்கீரிட் கலவையை சாக்கடையில் கொட்டிகொண்டு இருந்தார்கள். நான் சாக்கடையை எட்டி பார்த்தபோது சாக்கடையில் கழிவுநீர் சுமார் ஒரு அடிக்கு மேல் ஓடி கொண்டு இருந்தது. அங்கு பணியில் இருந்தவரிடம் கழிவுநீரை சுத்தமாக எடுத்துவிட்டு அல்லது தடுத்துவிட்டு போட வேண்டியது தானே சிமெண்ட் கலவை சாக்கடை நீரில் போகிறது சாக்கடை எப்படி தரமாக இருக்கும் என்று கேட்டேன். பதில் ஒன்றும் சொல்லாமல் கலவையை கொட்டிகொண்டே இருந்தார்கள்.

மேற்கண்ட சாக்கடை கட்டுமான பணிகள் ஒப்பந்த விதிமுறைகளை மீறி தரமற்ற முறையில் நடைபெற்று வந்தன. மறுநாள் சாக்கடை கட்டைகள் கட்டும் பணி நடைபெற்றது. இதையும் நான் பார்த்தபோது சாக்கடை கழிவுநீர்லேயே கலவைகள் கொட்டப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தன.

மேற்கண்டவற்றினை அரியமங்கல கோட்ட மாநகராட்சி உதவி ஆணையரிடம் நேரில் சென்று புகார் கொடுத்தேன். ஆனாலும், அடுத்த நாளும் சாக்கடை கழிவு நீரிலே கான்கீரிட் கலவை கொட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. இது ஒப்பந்த விதிமுறைகளை மீறி முறைகேடுகளில் ஈடுபட்டு அவசரகதியில் தரமற்ற முறையில் கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தன. இது லஞ்சம் ஊழலுக்கு வழிவகுக்கும். சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் துணையில்லாமல் ஒப்பந்த விதி மீறல் பணிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை. இதுபோன்று எல்லா கட்டுமான பணிகளிலும் முறைகேடுகள் நடைபெறுகிறது.

எனவே விதி மீறி கட்டப்படும் கட்டுமானங்ளுக்கு துணைபோகும் சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர், கோட்ட மண்டல தலைவர், துணைமேயர், மேயர் ஆகியோர் மீது சட்ட விதிகளின்படி குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை மற்றும் விதி மீறி செயல்படும் ஒப்பந்ததாரர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. மேற்கண்ட முறையீட்டு மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 21.08.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஆணையர் தன்னுடைய 01.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.32, தோப்புத்தெரு, நடைபாதையுடன் கூடிய மழைவாரி சாக்கடை கட்டும் பணிக்கு ரூ49.90 இலட்சம் மதிப்பீட்டில் டெண்டர் கோரப்பட்டு M/s TSP Construction, Trichy அவர்களுக்கு இதற்கான பணி உத்தரவு 07.12.2023 அன்று வழங்கப்பட்டது. சேதமடைந்திருந்த பழைய கழிவு நீர் சாக்கடையினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கட்டுமானப்பணிகள் நடைபெற்றது. தரைதளம் (P.C.C 1:5:10) நன்றாக உள்ளதால், அது அப்புறப்படுத்தப்படாமல் அதன்மீது தேவையான வாட்டத்துடன் (Required Gradient) அமைத்து பக்கவாட்டு சுவர்கள் கட்டப்பட்டு நடைபாதையுடன் கூடிய மழைவாரி சாக்கடை கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கட்டுமான பணியில் ஒரு சில குறைபாடுகள் தரைதளம் ஆய்வு செய்த பொறியாளர் பிரிவு அலுவலர்களால் கண்டறியப்பட்டு அதற்கான உரிய விளக்கம் கேட்டு 11.03.2024 மற்றும் 14.06.2024 நாளிட்ட கடிதங்களின் மூலம் ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டு பணி ஆணையில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்கண்ட பணி தொடர்பான விபரங்கள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| Description of work | As per Estimate | As per Actual Measurement |
|---|---|---|
| Pedestrian Drain | 248.00 M | 214.75 M |
| Culvert | 5 Nos.x 4.50 M = 22.50M | 5 Nos. = 24.20 RM |

மேலும், மேற்கண்ட பணியை அண்ணா பல்கலைக்கழகம், சென்னை BIT Campus, Trichy அவர்கள் ஆய்வு செய்து வழங்கப்பட்ட ஆய்வறிக்கை சான்றிதழ் உரிய Specification-ன்படியும், தரமான முறையிலும் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று உரிய சான்று 19.09.2024 அன்று அளித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 06.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட 32வது வார்டில் உள்ள தர்மநாதபுரம் மெயின்ரோட்டில் உள்ள பழைய கழிவுநீர் சாக்கடையை இடித்துவிட்டு புதிதாக சாக்கடை கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தன. 04.06.2024 அன்று பார்த்தபோது சாக்கடையின் தரை தளத்திற்கு ரெடிமிக்ஸ் கான்கீரிட், லாரி மூலம் கான்கீரிட் கலவையை சாக்கடையில் கொட்டிகொண்டு இருந்தார்கள். நான் சாக்கடையை எட்டி பார்த்தபோது சாக்கடையில் கழிவுநீர் சுமார் ஒரு அடிக்கு மேல் ஓடி கொண்டு இருந்தது. அங்கு பணியில் இருந்தவரிடம் கழிவுநீரை சுத்தமாக எடுத்துவிட்டு அல்லது தடுத்துவிட்டு போட வேண்டியதுதானே சிமெண்ட் கலவை சாக்கடை நீரில் போகிறது சாக்கடை எப்படி தரமாக இருக்கும் என்று கேட்டேன். பதில் ஒன்றும் சொல்லாமல் கலவையை கொட்டிகொண்டே இருந்தார்கள்.

மேற்கண்ட சாக்கடை கட்டுமான பணிகள் ஒப்பந்த விதிமுறைகளை மீறி தரமற்ற முறையில் நடைபெற்று வந்தன. மறுநாள் சாக்கடை கட்டைகள் கட்டும் பணி நடைபெற்றது. இதையும் நான் பார்த்தபோது சாக்கடை கழிவுநீர்லேயே கலவைகள் கொட்டப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தது.

மேற்கண்டவற்றினை அரியமங்கல கோட்ட மாநகராட்சி உதவி ஆணையரிடம் நேரில் சென்று புகார் கொடுத்தேன். ஆனாலும், அடுத்த நாளும் சாக்கடை கழிவுநீரிலே கான்கீரிட் கலவை கொட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. இது ஒப்பந்த விதிமுறைகளை மீறி முறைகேடுகளில் ஈடுபட்டு அவசரகதியில் தரமற்ற முறையில் கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தன. இது லஞ்சம் ஊழலுக்கு வழிவகுக்கும். சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் துணையில்லாமல் ஒப்பந்த விதி மீறல் பணிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை. இதுபோன்று எல்லா கட்டுமான பணிகளிலும் முறைகேடுகள் நடைபெறுகிறது.

மேலும் சாலைகளில் Patchworkஐ சரி செய்யாமல், கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

எனவே விதி மீறி கட்டப்படும் கட்டுமானங்ளுக்கு துணைபோகும் சம்மந்தப்பட்ட அலுலவர்கள் மீது சட்ட விதிகளின்படி குற்றவியல் நடைமுறை கட்டிடத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

6. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 2–ன் இளநிலை பொறியாளர் 06.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 2, வார்டு எண்.32, தோப்புத்தெரு, நடைபாதையுடன் கூடிய மழைவாரி சாக்கடை கட்டும் பணிக்கு ரூ. 49.90 இலட்சம் மதிப்பீட்டில் டெண்டர் கோரப்பட்டு M/s TSP Construction, Trichy அவர்களுக்கு இதற்கான பணி உத்தரவு 07.12.2023 அன்று வழங்கப்பட்டது. சேதமடைந்திருந்த பழைய கழிவு நீர் சாக்கடையினை இடித்து

அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கட்டுமானப்பணிகள் நடைபெற்றது. தரைத்தளம் (P.C.C 1:5:10) நன்றாக உள்ளதால், அது அப்புறப்படுத்தப்படாமல் அதன்மீது தேவையான வாட்டத்துடன் (Required Gradient) அமைத்து பக்கவாட்டு சுவர்கள் கட்டப்பட்டு நடைபாதையுடன் கூடிய மழைவாரி சாக்கடை கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கட்டுமான பணியில் ஒரு சில குறைபாடுகள் தள ஆய்வு சமயம் பொறியாளர் பிரிவு அலுவலர்களால் கண்டறியப்பட்டு அதற்கான உரிய விளக்கம் கேட்டு **11.03.2024** மற்றும் **14.06.2024** நாளிட்ட கடிதங்களின் மூலம் ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டு பணி ஆணையில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டவாறு கான்கீரிட் கலவை சாக்கடையில் கொட்டப்படவில்லை. சாக்கடைக்கு வெளியே கட்டுமானத்தின் பக்கவாட்டில் கொட்டப்பட்டு, தண்ணீர் வெளியேற்றியப்பின் கட்டுமான பணிகள் நடைப்பெற்றன. மேற்கண்ட பணி தொடர்பான விபரங்கள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| Description of work | As per Estimate | As per Actual Measurement |
|---|---|---|
| Pedestrian Drain | 248.00 M | 214.75 M |
| Culvert | 5 Nos. x4.50M= 22.50M | 5 Nos.= 24.20 RM |

மேலும், மேற்கண்ட பணியை அண்ணா பல்கலைக்கழகம், சென்னை BIT Campus, Trichy அவர்கள் ஆய்வு செய்து வழங்கப்பட்ட ஆய்வறிக்கை சான்றிதழ் உரிய Specification-ன்படியும், தரமான முறையிலும் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று உரிய சான்று **19.09.2024** அன்று அளித்துள்ளனர் என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு 32, தர்மநாதபுரம் மெயின்ரோட்டில் உள்ள பழைய கழிவுநீர் சாக்கடையை இடித்துவிட்டு புதிதாக கட்டுமான பணிகள் நடைபெற்றது என்றும், ஆனால் அதில் உள்ள கழிவு நீரை தடுக்காமலும், அல்லது அதனை அகற்றாமலும், சிமெண்ட் கான்கீரிட் கலவை கொட்டி தரமற்ற முறையில் பணி மேற்கொள்ளப்பட்டதை நேரில் கண்டு அது குறித்து அங்கு பணிபுரிந்தவர்களிடம் கேட்டப்பொழுது அதற்கு உரிய பதில் அளிக்காததால், இது குறித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடம் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து சம்மந்தப்பட்ட அலுவர்கள் மீதும், முறைகேடாக பணிசெய்த ஒப்பந்ததாரர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு எண்.32, தோப்புத் தெருவில் நடைபாதையுடன் கூடிய மழைநீர் சாக்கடை கட்டும் பணி ரூ.49.90 இலட்சம் மதிப்பீட்டில் M/s.TSP Construction, Trichy மூலம் சேதமடைந்திருந்த பழைய கழிவு நீர் சாக்கடையினை இடித்து விட்டு புதியதாக கட்டுமான பணிகள், தரைதளம் (P.C.C 1:5:10) நன்றாக இருந்ததனால் அதை அப்புறப்படுத்தாமல் அதன்மீது தேவையான வாட்டத்துடன் பக்கவாட்டு சுவர்கள் கட்டப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்றது என்பதும், ஆய்வின் போது சில குறைபாடுகள் கண்டறியப்பட்டு அதனை சரி செய்ய கோரி, **01.03.2024** மற்றும் **14.06.2024** நாளிட்ட கடிதங்களின் வாயிலாக ஒப்பந்தாரருக்கு அறிவுரை

வழங்கப்பட்டது எனவும், மனுதாரர் குறிப்பிட்டவாறு கான்கீரிட் கலவை சாக்கடையில் கொட்டப்படவில்லை என்பதும், சாக்கடையின் பக்கவாட்டில் கொட்டப்பட்டு, தண்ணீர் வெளியேற்றிய பின் கட்டுமான பணிகள் நடைப்பெற்றன என்பதும், மேலும் இப்பணிகளை அண்ணா பல்கலைக்கழகம், சென்னை BIT Campus, திருச்சி அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அவர்களால் மேற்கண்ட பணி தரமான முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

அண்ணா பல்கலைகழகம், திருச்சி மேற்கண்ட பணிகள் தரமான முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்று சான்று அளித்த நிலையில், பணிகளின் தரம் குறித்து மேலும் விசாரணை செய்யும் அவசியம் எழவில்லை. எனினும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள புகைப்படத்தில் நீரின் மீது கான்கீரிட் கலவை கொட்டப்பட்டுள்ளதை காண முடிகிறது. மேற்கண்ட புகைப்பட ஆதாரத்தை முற்றிலுமாக புறந்தள்ள இயலாது. மனுதாரின் கூற்று உண்மை என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டியது. எனவே, இனி வருங்காலங்களில் இம்மாதிரியான கட்டுமான பணிகள் நடைபெறும் முன்பு அங்குள்ள தண்ணீரை வெளியேற்றி (De-water) அதன்பின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கள ஆய்வு மூலம் கண்காணித்து உறுதி செய்து கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு வீ. ராமதாஸ்,
எண்.10, பாலக்கரை மெயின் ரோடு,
திருச்சிராப்பள்ளி– 620 001.

2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.
திருச்சிராப்பள்ளி.

3. உதவி ஆணையர்,
அரியமங்கலம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகரரட்சி,
மதுரை ரோடு,
திருச்சிராப்பள்ளி– 620 001.

4. நகரரட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

5. இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர் / செயலாளர் (FAC).